அறிவினு னாகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போற் போற்ருக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

# TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

# ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் II.] JUNE, 1902–ஹ ஜூன். [இலக்கம். 2.

## ஜீவகாருண்யமுள்ள



## எட்வார்ட் மகாராஜனும் அலெக்ஜாந்தரா இராணியும்.

நமது தேசத்துச் சக்கரவர்த்தியாகி அரசாளும் மாட்சிமைதங்கிய எழாவது எட்வார்ட் மகாராஜன் கடவுளருளால் இப்போது ஒன்றரை வருஷகால மாய்ச்செங்கோல்செலுத்திவருகிருர். அவருடைய உத்தம மாதாவான விக்ட்டோரியா மகாராணி யாரைப்பற்றிப் பெருமையாக வழங்கும் வைப வங்களுக் கிணங்கவே, இந்த 16 மாத காலமாக நாட்டுக்கு நல்லரசனென்னும்படி இவர் ஸகல காரி யங்களையும் நன்கு நடத்தி வருகிருரென்றே நம்பி, இவர் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு கிரீடந் தரிக்கும் காலத்தில், இதற்குமுன் எப்போதுமில் லாத இந்த விஸ்தீரணமான ராஜ்யத்தின் குடிக ளெல்லாம் ஒரே வாக்காய்ப் புகழ்கின்ருர்கள். மகுடாபிஷேககாலம் சமீபித்திருக்கும் தருணத்தில் இவருக்குத் திடீரென்று வயிற்றில் ரணங்கண்டு வருந்துவதைப்பற்றி நாஞதேசத்தாரும் அனுதாபப் படுகிருர்கள். ஆகிலும் இந்த விக்கினம் சீக்கிரத் தில் நீங்கும்படி சிகிச்சோபசாரங்கள் நடந்துவரு வதனுல், குளிர்காலத்துக்கு முன்னமே முடிதரித்து உன்னதமான சிங்காசனததில் எட்வார்ட் மகாரா ஜன் வீற்றிருக்கும் பெருங்காட்சியானது தெய் வானுகூலத்தால் அனுபவக்காட்சி யாகுமென்று எதிர்பார்த்து நம்முடைய ஆனந்தவிண்ணப்பங் களைச் சிங்காசனத்தின் பாதபீடத்தில் செலுத்த உற் சாகமாயிருப்போமாக.

விக்ட்டோரியா மகாராணியைப்போன்ற உசித மான மேல்வரிச் சட்டத்தைப் பெறுதலான பாக் கியம் இந்த எட்வார்ட் மகாராஜனுக்கன்றி இதற்கு முன் வேறெவர்க்கும் கிடைத்ததில்லை! அப்படிப் பட்ட பாக்கியம் கிடைத்தாலும், மகா வைபவ மான அறுபத்துமூன்று வருஷத்து அரசியலிலே அம்மகாராணியார் அனுசரித்துவந்த ஒழுக்கத்தின் நீதிநெறியை அந்தப்பிரகாரம் வேறு எவரும் அனு சரித்திருக்கவுமாட்டார்கள். மகாராணியார் உறங்கி விட்டதுமுதல் சென்றுவருகிற காலமானது மனக் கவலை மிகுந்த காலமாகவே இராநின்றது இதற்கு முன் ஆங்கிலேயருக்குப் பல வருஷகாலமாக நே ரிட்ட பலவற்றினும் இது மிகவும் கடுமையான தருணமாகவே இருக்கின்றது. ஆப்பிரிக்காவில் மிகவும் கஷ்டமான படையெடுப்பை நிர்வகிக் கும்பொருட்டு ராஜ்ய வருமானங்களை மீண்டு மீண்டும் பரிசோதித்துப் பார்த்தலும், நன்முகங் கொண்டு அங்கே அமைதியுண்டாக்க முயன்று சமாதான உடன்படிக்கை செய்வித்தலும், ஆஸ்தி ரேலியாவின் மாகாணங்களை ஐக்கியப்படுத்தி ஒருங்குசேர்த்தலும், இளவரசர் இங்கிலீஷ் ராஜ்ய முழுமையும் பிரயாணஞ் செய்துவருவதும், வர்த் தகவிஷயத்தில் எதிராளிகள் எட்டி போட்டி யாய் ஏற்பட்டிருப்பதும் முதலான சில பெரிய வியவகாரங்களில் அரசன் ஊடாடவேண்டியதாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அவலமான காலத்

தில் இவர் ராஜ்பத்துக்கு யாதொரு அபாயமும் உண்டாகாதபடி காரிய நிர்வாகம் பண்ணிவந்தபடியால், இனிமேல் எப்படிப்பட்ட விபத்து நேரிட்டாலும் அதையெல்லாம் ஈடுகொடுத்து நிர்வாகிப்பார் என்று நாம் தைரியங்கொள்ளத் தடையில்லை.

நாற்பது வருஷத்துக்கு முன்னே பத்தொன்பது வயதுள்ள மணமகளாக இங்கிலாந்தில் வந்திறங்கியபோது எப்படியோ அப்படியே இப்பொழுதும் குடிகளால் விசுவாசிக்கப்பட்ட இவருடைய பட்ட மஹிஷியான அலெக்ஜாந்தரா ராணியாரும் நல்ல விஷயங்களில் நோக்கமுள்ளவராய் மகாராஜனைப்போலவே ஜீவகாருண்யத்துடன் பற்பல நன்மைகளை விளைவிப்பதையும்நாம் மறத்தலாகாது.

ஒரு புத்திரனானாலுங் குருபுத்திரன் என்பதற்கிலக்கியமான இவருடைய ஏகபுத்திரரும், மகாராணியாருடைய தேகவியோகத்தால் துக்கப்படுகின்ற தமது வீட்டில் துக்கபரிகாரமாய் இருப்பதற் கியலாமல், அரசாட்சி நன்மையின்பொருட்டு அலைந்து திரிந்துவந்ததையும் நாம் நன்றியறிவுடன் பாராட்டவேண்டும்.

இந்தப்பிரகாரம் எட்வார்ட் மகாராஜன் மகாசாமர்த்தியத்துடன் அரசாட்சி செய்துவருவதாலும், குடிகளில் ஒருவர்போலத் தாமும் குடிகளுக்கு ஒரு உதாரணமாகும்படி நன்கு நடத்திவந்ததாலும், அவர் பிரஜைகளுடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறார். நானா பேதமுள்ள ஜாதியாரும் சமயத்தாருமான அனேக கோடி ஜனங்களும் இப்பொழுது மனப்பூர்த்தியாய் "ஜய ஜய" என்ற கோஷத்துடன் "பகவான் அரசனை ரக்ஷிப்பாராக; ராஜா திருடகாத்திரராய் நீடித்துச் செங்கோல் செலுத்திவருவாராக" என்னும் பிரார்த்தனைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

## அடிமைப்பட்ட ஜெந்துக்களுக்கு நாம் தீர்க்கவேண்டிய கடன்.

மனித ஜாதியிலும் மனிதக் கூட்டத்திலும் சேராதவைகளாயினும் மனிதரோடு கூடவே வசிக்கின்ற பிராணிகள் அநேகமுண்டு. அவை நமக்கு அவச்யம் தேவையான பல பொருள்களையும் சுகங்களையும் விசேஷமாய் அளிக்கின்றன. அந்தப் பிராணிகள் இல்லாவிட்டால் நாம் பிழைத்திருப்பதே கூடாதுதான். ஆதலால் அவைகளிடத்தில் நாம் மிகவும் கடன்பட்டவர்களாக நன்றியுடன் அவைகளை ஆதரிக்கத் தக்கவர்களாகிறோம். அவைகளைப்போல நமக்கு அவ்வளவு உபகரிக்கத் தக்கவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா? ஒருவருமில்லை.

அவைகளில் மிகுந்த ஊக்கத்துடன் நம்முடைய பெருஞ் சுமைகளை எங்கும் இழுத்துக்கொண்டு ஓடுகிற பிராணியொன்று எப்போதும் நமக்கு நேசனாயிருக்கிறது. அது மிகுந்த தேகவலிமையும் சுறுசுறுப்பும் உடையதாகி, வாயில் கடிவாளமும் முதுகில் சேணமும் போடவும் தன்னை வண்டி முதலியவைகளில் பூட்டவும் பொறுமையாய் உடன்பட்டிருந்து, நமக்கு இஷ்டமான இடமெல்லாம் நம்மையும் நம்முடைய சாமான்களையும் இழுத்துக்கொண்டு ஓடுகின்றது. இதுவல்லாமல் தன் முதுகின்மேல் நம்மையும் சுமந்துகொண்டு நெடுந்தூரம் யாத்திரைபோகின்றது. அந்தப் பிராணியின் உதவி யில்லாவிட்டால் நாம் நம்முடைய மெலிந்த கால்களைக்கொண்டு ஒருபோதும் அவ்வளவுதூரம் நடந்து போகமாட்டோம்.

வியாபாரங்கள் விசேஷமாய் நடந்தேறுகின்ற ஒரு நகரத்து வீதியில் பத்து நிமிஷகாலம் நின்று பார்ப்போமானால் அவ்வளவு காலத்திற்குள் அவ்வழியாய் எத்தனை குதிரைகள் வண்டிகளை இழுத்துக்கொண்டும் மனிதர்களை ஏற்றிக்கொண்டும் போகின்றன என்பதை நாம் எளிதில் அறியலாம். பின்பு அதைக்கொண்டு குதிரைகளும் மாடுகளும் நமக்கு இவ்வளவு உபயோகமானவை யென்றும், அவை நமக்கு அடங்கி ஊழியஞ்செய்ய உடன்படாமற் போனால், அப்போது போக்குவரவுகளுக்கும், பல வியாபாரங்களுக்கும், பலவிதமான விநோதங்களுக்கும் உடனே அழிவு உண்டாகுமென்றும் நாம் ஊகித்தறிந்துகொள்ளலாம்.

மூட்டை சுமக்கின்ற மற்ற மிருகங்களும் இவ்வண்ணமானவையே. குதிரைகளைப்போலவே தேகவலியுள்ளவையான கழுதைகளும் பொறுமையோடும் பிரியத்தோடும் தம் வலிமையை நமக்கு உபயோகப்படுத்துகின்றன. அவைகளைக் கொள்ளவும் காப்பாற்றவும் செலவு குதிரைகளைக்காட்டிலும் சொற்பமாய் இருப்பதால், அவை எளிய ஜனங்களுக்குமுக்கியமாய் உபயோகப்படுகின்றன. அது செய்கின்ற உதவிக்கு அதனிடத்தில் நன்றியுடையவர்களாய் அதை ஆதரிக்க வேண்டியதுபோக, அனேகர் அதை அடித்து வதைக்கிறார்கள். மேலும் தக்க இரைபோடாமல் வெயிலிலும் மழையிலும் அல்லாடவிட்டு வருத்துகிறார்கள். இதே ஜாதிகளைச்சேர்ந்த கோவேறு கழுதைகள் மலைநாடுகளில் தனிகர் தரித்திரர் எல்லோருக்கும் விசேஷமாய் உபயோகப்படுகின்றன. இவ்வண்ணமே மாடுகள் நமக்கு மிகவும் முக்கியமானவை. இங்கிலாந்து முதலான சில விடங்களில் ஏருழுவது முதலிய வேலைகளுக்குக் குதிரையையே இப்போது உபயோகப்படுத்துகிறார்களாயினும், நமது தேசத்திலும் ஆப்பிரிக்காமுதலான பலதேசத்திலும் எருத்து மாடுகளையே கட்டைவண்டியிழுப்பது ஏருழுவது முதலான வேலைகளுக்கு உபயோகப்படுத்துகின்றனர். ஆப்பிரிக்கா, அரேபியா இத்தேசங்களில் வழிதுறை யில்லாத வனாந்தரங்களின் மூலமாய் பெரும் பாரங்களைச் சுமந்துகொண்டுபோக ஒட்டகங்களும் யானைகளும் உபயோகப்படுகின்றன.

இந்தப் பிராணிகளிடத்தில் நாம் மிகவும் கடன் பட்டவர்களாகிறோம். அந்தக் கடனைத் தீர்த்துக் கொள்ள நம்மாலாவதில்லை. ஏனெனில் நாம் ஒருவர்க்கொருவர் பணங்கொடுத்துக் கடன் தீர்த்துக் கொள்வதுபோல் இவைகளுடைய கடனைத் தீர்ப்பதற்கில்லை; பணத்தைக்கொண்டு அவை என்ன செய்யமாட்டும்? நாமோ, அதை ஆஸ்தியாய்ச்சேர்த்து வைத்துத் தள்ளாதவயதில் அதைக்கொண்டு ஜீவிப்போம். நாம் அனுபவிப்பதுபோன்ற நல்லுணவுகளையும் சௌக்கியங்களையும் அவைகட்குச் சம்பாதித்துக்கொடுத்து அக்கடனைத் தீர்த்துக்கொள்வதற்கில்லை. ஏனெனில், நமக்கு எது நல்லுணவாயும் சௌக்கியமாயும் தோற்றுகிறதோ, அது அவைகட்கும் நல்லதாகத் தோன்றமாட்டாது. பின்னென்னவெனில், அவைகளுடைய சௌக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும்தேவையானவை இவையென்பதை நாம் தேர்ந்தறிந்து அதற்கேற்றவைகளைக் கொடுத்தே அக்கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். நாம் நமக்கேற்ற நல்லுணவைத் தேடுவதுபோல அவைகளும் தமக்கேற்றவைகளையே தேடுகின்றன. இரவில் வசிக்கச் சரியான மறைவிடம் அவைகட்கு வேண்டும்; பகற்பொழுது வேலைசெய்து அலுத்துப்போனபிறகு அதனால் ஒழிந்துபோன தேகவலிமை மறுபடி உண்டாகும்பொருட்டுச் சிறிது நேரம் இளைப்பாறியிருத்தலும் வேண்டும்.

மேலும் அவைகளின்மேல் ஏற்றுகிற சுமை அதிகமாய்த் தாங்கத்தக்கவளவுக்கு அதிகப்பட்டு இருக்கக்கூடாது. அவைகளின்மேல் போடுகிற சேணம் முதலியவை அவைகளைச் சிறிதும் வருத்தாதவைகளாய் இருக்கவேண்டும். சாட்டையால் அவைகளை அதிகமாய் அடித்துத் தொந்தரை செய்யலாகாது. வேண்டுமானால் அவைகளுக்குச் சுறுசுறுப்பு உண்டாகும்படி ஒவ்வொரு தருணத்தில் மெதுவாகச் சாட்டையை உபயோகிக்கலாம். நாம் நம்முடைய பிள்ளைகளைப் பழக்குவதுபோலப் பிரீதியோடும் பொறுமையோடும் இந்தப் பிராணிகளைப் பழக்கவேண்டும். அவை கிரமமாய்ச் செய்ய வேண்டிய வேலை இன்னதென்று அவைகட்கு நாம் தெரியக் கற்பித்துக்கொடுத்து விடுவோமேயானால் பிறகு நாம் அதற்காக அவைகள் விஷயத்தில் சாட்டையை உபயோகிக்க வேண்டிய அவசியமே நேரிடாது. ஆயிரம் பேச்சும் வாய்ப்பிரசங்கமும் ஏன்? நாம் கையாளும் குதிரைகள், கழுதைகள், ஆடு மாடுகள் முதலான வாயில்லாத பிராணிகள் தினந்தோறும் நமக்குச் செய்கின்ற உதவிக்கேற்றதாய்ப் பத்திலொருபங்குகூடப் பிரதியுபகாரம் நம்மால் செய்ய முடியாது என்பதை நினைத்து, அவைகளிடத்தில் அன்பும் ஆதரவும் இரக்கமும் உடையவர்களாயிருத்தலே அவைகளுக்கு நாம் பட்ட கடனைத் தீர்த்தலாகும்.

# வாயில்லாத ஜீவராசிகளிடத்தில் அன்புபாராட்டல்.

### சம்பாஷணை.

**கேள்வி.**—நாம் பழக்கி வீட்டில் வைத்துக் கொண்டு வருகிறோமே, அந்தப் பிராணிகளிடத்தில்மாத்திரந்தானா நாம் தயை வைக்கவேண்டும்?

**உத்தரம்.**—நாம் எல்லா ஜீவஜந்துக்களிடத்திலும் நிஷ்பக்ஷபாதமாய் தயைவைக்கவேண்டும்.

**கே.**—நாம் பழக்காத பக்ஷிஜாதிகளில் அழகுள்ளவைகளான சிலவற்றைச் சொல் பார்ப்போம்.

**உ.**—நீலவருணப் பக்ஷிகளும் இன்னும் சில காட்டுப்பறவைகளும் இருக்கின்றன.

**கே.**—இவைகள் வருஷா வருஷம் காட்டைவிட்டு வந்து மனிதரிடத்தில் பழகிக்கொண்டிருக்கிறவைகளா?

**உ.**—இல்லை, இல்லை. அவைகளில் சில சீதளகாலத்திலே இங்கிருக்கும் குளிர் பொறுக்கமாட்டாமல் அதிக குளிர் இல்லாத வேறு தேசங்களுக்கு ஓடிப்போய், பிறகு இங்கே கோடைகாலம் வந்தபின் திரும்பி வந்துவிடுகின்றன.

**கே.**—அப்படி ஓடிப்போகும் பறவைகள் எப்போதும் இவ்விடத்திற்கே திரும்பி வரவேண்டுமென்றால் நாம் என்னசெய்யவேண்டும்?

**உ.**—அவைகள் இங்கே கட்டும் கூடுகளில் நாம் கையிடக்கூடாது. அவைகளையும் நாம் உபத்திரவம் செய்யக்கூடாது.

**கே.**—அவைகள் நம்மைச் சுற்றிக்கொண்டு விசுவாசமாயிருக்க நாம் என்ன செய்யவேண்டும்?

**உ.**—பிரதிதினம் தானிய மணிகளையும் ரொட்டித்துண்டுகளையும் அவைகளுக்குத் தீனி போட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

**கே.**—அந்தப் பறவைகளினாலே நமக்கு ஏதாயினும் பிரயோஜனம் உண்டா?

**உ.**—அவைகளில் சில பார்வைக்கு மிகவும் அழகாய் இருக்கின்றன. சில ஆனந்தமாய்க் கூவும். இந்தப் பிரயோஜனம் போதாதா?

**கே.**—அவைகளால் காரியசாதகம் ஏதாவது உண்டோ?

**உ.**—உலகத்தில் மனிதனுக்கு உதவும் மரங்கள் பழங்கள் முதலானவைகளுக்குக் கெடுதி யுண்டு பண்ணுகிற பூச்சிகள் எத்தனையோ இருக்கின்றன. அப்பூச்சிகளை எல்லாம் இப்பறவைகள் மூக்கினால் கொத்திக் கொன்றுவிடுகின்றன.

**கே.**—சில விஷமக்காரப் பயல்கள் பக்ஷிகளைக் கல்லால் அடிக்கிறார்களே, அப்படிச் செய்தால் அப்பறவைகள் என்ன செய்கின்றன?

**உ.**—அப்படிப்பட்ட பக்ஷிகள் இந்நாட்டைவிட்டு ஓடிப்போய்விடுகின்றன. நிரபராதிகளான பக்ஷிகளைக் கல்லால் அடிப்பது முழு மூடத்தனம், அதுவுமல்லாமல் பாவம்.

கே.—ஊர்க்குருவிஜாதிப் பறவையால் காரிய சாதகம் ஏதாவதுண்டா?

உ.—உண்டு. மரத்துக்குக் கெடுதியுண்டுபண்ணும் பூச்சிகளை எல்லாம் அந்தக் குருவிகள் ஒழித்துவிடுகின்றன.

கே.—அமெரிக்காவில் இந்த ஊர்க்குருவிகள் அநேகம் இருக்கின்றனவே, அவைகள் அங்கேயே பிராசீனமாக இருக்கின்றனவா? அல்லது அவ்வூருக்கு வேறே எங்கிருந்தாவது கொண்டுபோகப்பட்டனவா?

உ.—எப்போதும் அமெரிக்காவில் அவை பிராசீனமாக இருப்பதுபோல் காணப்படுகின்றன. ஆனாலும் சில வருஷங்களுக்குமுன் அமெரிக்காவில் அந்த ஜாதிஊர்க்குருவிகள் இல்லாமலிருந்தனவாம்.

கே.—அவைகள் முதலில் அமெரிக்கா தேசத்திற்கு எங்கிருந்து கொண்டுபோகப்பட்டன?

உ.—ஐரோப்பாவிலிருந்துதான்.

கே.—அந்த ஊர்க்குருவிகளை அமெரிக்காவுக்கு என்னகாரியமாய்க் கொண்டுபோனார்கள்?

உ.—அதற்குமுன்னே பூச்சிகளால் பற்பல நல்ல மரங்கள் அரிக்கப்பட்டுப் பட்டுப்போய்க் கொண்டிருந்தன; அப்பூச்சிகளை ஒழித்துவிட ஊர்க்குருவிகள் அவசியமாக இருந்தன.

கே.—அந்தக் குருவிகள் வந்து சேர்ந்தபிறகு மரங்கள் பட்டுப்போகாமல் காப்பாற்றப்பட்டனவா?

உ.—ஆம். நல்லவேளை, ஊர்க்குருவிகள் வந்ததுமுதல் மரங்கள் பூச்சிகளால் அரிக்கப்பட்டுப் பட்டுப்போய்விட்டன என்கிற பேச்சே கிடையாது.

கே.—மழைநாளில் பூச்சிகள்தாம் கிடையாதே, பூமி முழுதும் உறைபனியாக இருக்குமே. அப்போது மேற்படி குருவிப்பாடு திண்டாட்டம் அல்லவா?

உ.—ஆமாம் பாவம்! அப்போது அப்பறவைகளுக்கு மிகவும் கஷ்டந்தான். பசியினால் வருந்தி அநேகம் மாண்டுபோகின்றன.

கே.—அவைகள் அப்படி அகதிகளாகக் கஷ்டப்படுகின்றனவே, நம்மாலே ஏதாகிலும் அவைகளுக்குச் செய்யக்கூடிய உதவி உண்டா?

உ.—ஆமாம் உண்டு. அரிசிமா அடைத்துண்டுகளை அவைகளுக்கு நாம் தீனியாய்ப் போடலாம்.

கே.—நாம் தினம் ஒரு ஏற்பாடாய் அவைகளுக்கு அரிசிமா அடைத்துண்டுகள் போட்டுக் கொண்டுவந்தால் அவைகள் என்னசெய்யும்?

உ.—அவைகளெல்லாம் சரியாக அந்தத்தருணத்துக்குக் கூடிவந்து ஆகாரம் கிடைக்கப்போகிறதென்கிற சந்தோஷத்தின்மேல் கீச்சிட்டுக்கொண்டிருக்கும்.

கே.—கடவுள் எவ்வகைப் பிராணிகளை நமக்குச் சிருஷ்டித்தருளி யிருக்கிறார்?

உ.—எவ்விதமாகவாவது நமக்கு உபயோகப்படக்கூடிய பிராணிகளைத்தான் சிருஷ்டித்தருளியிருக்கிறார்.

கே.—காட்டு மிருகங்களினால் நமக்கு என்ன பிரயோஜனம்?

உ.—அவைகளைக் கொன்று அவைகளின் மாமிசத்தைப் பலர் புசிக்கலாமே.

கே.—அப்படிக் கொன்று சாப்பிடக் கூடிய காட்டுப் பிராணிகள் சிலவற்றைச் சொல்லு?

உ.—மான், முயல், கௌதாரி, காடை, காட்டுக் கோழி, பெட்டைத்தாரா, பெருந்தாரா முதலானவைகளேயாம்

கே.—ஆகாரமாவது தவிரக் காட்டுப் பிராணிகளினால் நமக்கு வேறு உபயோகம் உண்டா?

உ.—அவைகளின் ரோமத்தினால் நாம் தரிக்க ஆடைகள் செய்யப்படுகின்றன.

கே.—அப்படி ஆடைகள் செய்யக்கூடிய ரோமத்தையுடைய பிராணிகளில் சிலவற்றைச் சொல்லு பார்ப்போம்.

உ.—ஸீல் என்கிற மச்சம், குள்ளநரி, எர்மின் என்கிற அணிற்பிள்ளைஜாதி மிருகம், நீர்நாய் முதலியன.

கே.—கடவுள் படைத்திருக்கும் ஜீவராசிகளால் ஆகாரம் ஆடைதவிர வேறு ஏதாகிலும் உபயோகம் உண்டா? இருந்தால் அவைகளில் சிலவற்றைச் சொல் பார்ப்போம்.

உ.—திமிங்கில மீனிலிருந்து எண்ணெயும் எலும்பும், தேனீக்களிலிருந்து தேனும் அகப்படுகின்றன.

கே.—நம்மை உபத்திரவிக்காமலும் நமக்கு மேல் கண்டவிதமாய் உபயோகப்படாமலு மிருக்கும் ஒரு காட்டு ஜந்துவைக் கொல்ல நமக்கு அதிகாரமுண்டா?

உ.—இல்லை; நாம் உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்காக மாத்திரம் ஈசுவரன் உயிர்ப்பிராணிகளை சிருஷ்டித்தருளி யிருக்கிறார்; நமக்கு அவசியமில்லாதபோது அவைகளை நாம் ஹிம்சிக்கவாவது கொல்லவாவது கூடாது.

கே.—எறும்பு ஜாதி விஷயமாக நீதிநூல் என்ன சொல்லுகிறது?

உ.—சோம்பேறிகளாயிருக்கும் மானிடர்களே, எறும்பின் நடவடிக்கைகளைப் பார்த்துப் புத்தி தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறுகிறது.

கே.—சோம்பேறிகள் கேவலமான எறும்பின் வழிகளைப்பார்த்துப் புத்திதெரிந்துகொள்வது என்?

உ.—எறும்பைப்போல் வருந்தி உழைக்கிற பிராணிகள் வேறொன்று இல்லையாதலால்.

கே.—எறும்பு எந்தக் காரியமாக அவ்வளவு சிரமப்படுகிறது?

உ.—வரப்போகிற குளிர்காலத்திற்காக ஆகாரம் சேர்த்து வைத்துக்கொள்ள அது கோடைகாலம் முழுதிலும் உழைக்கிறது.

கே.—அனுவசியகமாய் நாம் ஒரு எறும்பின் மேல் வேண்டுமென்று காலடி வைக்கலாமா?

உ.—கூடாது. ஒரு பெரிய பூதம் நம்மை மிதித்து நசுக்கிவிட நாம் எப்படி மனம் ஒப்ப மாட்டோமோ, அப்படியே எறும்புகள் அவைகளை நாம் மிதித்துக் கொன்றுவிடச் சம்மதிக்கமாட்டா.

கே.—நாம் சில தருணங்களில் எறும்புகள் நுழைந்துகொண்டும் வெளியே வந்துகொண்டு மிருக்கும் எறும்பு வளையைப் பார்க்கிறோம். அந்த வளையை நாம் மிதித்து அழித்துவிடுவது நியாயமா?

உ.—அது நியாயமல்ல. எப்படி நாம் ஒரு பூதம் நமது வீட்டை மிதித்து அழித்துவிடுவதற்கு நாம் சம்மதியோமோ, அதுபோலவே எறும்பு வளையை மிதித்து அழித்துவிடுவதற்கு எறும்புகள் மனம் ஒப்பமாட்டா.

கே.—ஈசுவரனானவர் எறும்பைப்போலொத்த சிறிய பூச்சிகளைக்கூடக் கண்காணித்துவருகிறாரா?

உ.—ஆம், வருகிறார். ஏனெனில், மற்ற ஜீவராசிகளாப்பந்தம் எறும்புகளைப் பாதுகாக்க அவர் எண்ணங்கொள்ளாவிடில் எறும்புகளை அவர் சிருஷ்டித்திருக்கவேமாட்டார்.

கே.—மனிதர்களுக்கு மிக்க உபயோகமுள்ள பூச்சிகளில் சிலவற்றைச் சொல்லு பார்ப்போம்.

உ.—பட்டுப்பூச்சியும் தேனீயும்.

கே.—பட்டுப்பூச்சியையும் தேனீயையும் நாம் வளர்த்தோமேயானால் நாம் முக்கியமாக என்ன செய்யவேண்டியிருக்கும்?

உ.—அவைகளின் சுபாவகுணத்தைக் குறித்த விவரங்களையும், அவைகளை வளர்க்கும் முறைகளையும் செம்மையாய்க் கற்றுக்கொள்ளவேண்டும்.

கே.—பட்டுப்பூச்சியினாலும் தேனீயினாலும் நமக்கு என்ன கிடைக்கிறது?

உ.—பட்டுப்பூச்சியினால் பட்டுநூலும், தேனீயினால் தேனும் மெழுகும் அகப்படுகின்றன.

கே.—முற்காலத்தில் ஜனங்கள் தேனடையிலிருந்து தேனை எப்படி எடுத்துக்கொண்டிருந்தார்கள்?

உ.—அவர்கள் புகைபோட்டுத் தேன்கூட்டும் பூச்சிக்கூட்டத்தை அழித்துத் தேனை எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

கே.—அப்படிச் செய்வது மிகவும் கொடுமையான செய்கை யல்லவா?

உ.—ஆமாம். அதனால் வீண் நஷ்டமும் சம்பவித்துக்கொண்டுவந்தது.

கே.—தேன் கூடுகள் விஷயமாய் நாம் எப்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்?

உ.—வேறு பூச்சிகள் வாராமலும் மழைகாலத்தில் குளுமை சேராமலு மிருக்கும்படி அவைகளைப் பாதுகாக்கவேண்டும்.

கே.—கடவுளானவர் இந்தப் பிரபஞ்சத்தையும் இதிலுள்ள யாவத்து ஜீவராசிகளையும் சிருஷ்டித்த பிறகு இவைகளைக் குறித்து என்ன அபிப்பிராயம் கொண்டாரென்று சொல்லப்பட்டிருக்கிறது?

உ.—ஜீவராசிகள் அனைத்தையும் ஈசுவரன் ஒவ்வொன்றாய் நேரில் பார்த்தார். ஒவ்வொன்றும் அதிசயமாயிருந்தது.

கே.—கடவுளானவர் இன்னமும் தமது ஜீவராசிகளைப்பற்றி எண்ணமுள்ளவராயிருக்கிறாரா?

உ.—ஆம், அவர் எல்லா ஜீவராசிகளையும் கிருபாகடாக்ஷமாகப் பார்த்துவருகிறார்.

கே.—ஜகதீசன் நீரூற்றுக்களை என்ன பிரயோஜனத்திற்காக சிருஷ்டித்திருக்கிறார்?

உ.—கட்டாந்தரையில் நடமாடும் சகல பிராணிகளுக்கும் குடிக்கத் தண்ணீர் அகப்படுவதற்காகத்தான்.

கே.—கடவுள் தாம் சிருஷ்டித்த ஜீவராசிகளுக்கு நேரும் சுகதுக்கங்களை யெல்லாம் நினைக்கிறாரா?

உ.—அதற்குச் சந்தேகம் என்? அவருக்குத் தெரியாமலும் அவர் மனதில் பதிந்துகொள்ளாமலும் ஊர்க்குருவிகூடப் பூமியில் விழுந்து சாகிறதில்லை. ஏனென்றால் கஷ்டப்படும் ஜீவராசி எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும், அவருக்குத் தெரியாமல் அதற்கு ஒரு காரியமும் நடக்கிறதில்லை. ஈசுவரன் அவ்வளவு கருத்தாகப் பார்த்துவருகிற பிராணிகளை நாம் தொந்தரவு செய்தோமேயானால் அவர் சட்டங்களுக்கு விரோதமாக ஒரு மஹத்தான பாபத்தைச் செய்தவர்களாகத்தாம் நினைப்பார்.

கே.—கடவுள் நாம் என்னவாய் நடந்துகொள்ள வேண்டுமென்கிறார்?

உ.—நாம் நியாயமாக நடக்கமேண்டுமென்றும், கருணையுடன் கூடியிருக்கவேண்டுமென்றும், அவர் செய்கிறபடி நாமும் செய்யவேண்டுமென்றும் கடவுளானவர் நியமித்திருக்கிறார்.

கே.—பேசமாட்டாத மிருகங்களை நியாயமாக நடத்தவேண்டுமென்றால் என்ன அர்த்தம்?

உ.—என்றால், அவைகளை நாம் மனிதர்கள் போல் பாவித்து அவைகளுக்கு யாதொரு தீங்கும் செய்யாமல், அவைகளுக்கு அனுகூலமாகச் செய்யக்கூடிய காரியங்கள் யாவற்றையும் நாம் செய்ய வேண்டுமென்பதுதான் அதின் அர்த்தம்.

கே.—கருணையோடு கூடியிருத்தல் என்பதற்கு என்ன தாற்பரியம்?

உ.—அதாவது நாம் அவைகளுக்கு யாதொரு தீங்கும்உண்டாகாமலிருப்பதற்காகவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்பதும், தீங்குகள் உண்டானால் நம்மால் கூடியமட்டில் அந்தத் தீங்குகளை நிவிர்த்திசெய்ய முயலவேண்டுமென்பதும்தான்.

கே.—எல்லா ஜீவராசிகளிடத்திலும் கருணையாயிருக்கிறவர்களைப்பற்றி இன்னும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

உ.—கருணையோடு கூடியிருக்கிறவர்கள் புண்யவான்கள். ஏனெனில் அவர்களிடத்தில்தான் கடவுளும் கிருபைபண்ணிவருவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நாம் அன்னிய ஜனங்களிடத்திலும் வாயில்லாத ஜீவனிடத்திலும் கருணையோடு கூடியிருந்தால் கடவுளும் அதற்குச் சரியாகவே நம்மைக் கடாட்சிப்பார் என்று அர்த்தம்.

கே.—ஈசுவரன் எப்படி நடக்கிறார்?

உ.—அவர், கருணாசமுத்திரமாயும் கோபமில்லாதவராயும் இருக்கிறார். ஸர்வஜகத் பிதாவான கடவுள்கூடக் கருணையுடன் கூடியிருக்கிறபடியினால் நீங்களும் கருணைபாராட்டவேண்டுமல்லவா?

கே.—கடவுளானவர் தாமும் கருணையோடு கூடியிருந்துகொண்டு அகில ஜனங்களும் அவ்விதமாகவே இருக்கவேண்டுமென்று சொல்லுகிற போது நமது கடமை என்ன?

உ.—நாம் கருணையோடு கூடியிருந்துகொண்டு பிள்ளைகளும் அவ்விதமாகவே இரக்கமுள்ளவராகச் செய்துவரவேண்டியது நமது கடமை.

கே.—குரூரமான செய்கைகள் நடக்கிறதை நாம் பார்த்தோமேயானால் நாம் என்ன செய்ய வேண்டும்?

உ.—அவைகளை நிறுத்த நாம் முயலவேண்டும்.

கே.—ஜனங்கள் மூடத்தனத்தால் குரூரமாக இருந்தால் நாம் என்ன செய்யவேண்டியது?

உ.— அவர்கள் செய்வது உண்மையாகவே கொடுமையான காரியமென்று அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

கே.—மனிதர்கள் வேண்டுமென்று இடரான காரியங்களைச் செய்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

உ.—அப்படிச் செய்பவர்களை நாம் தண்டித்து இனி அப்படிச் செய்யாமலிருக்கும்படிக் கண்காணித்து வரவேண்டும்.

கே.—வாயில்லா ஜீவன்களை உபத்திரவிக்காமலிருக்க ஏதாகிலும் சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா?

உ.—ஆம், அப்படி அநேக சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கே.—அப்படி வாயில்லா ஜீவன்களை உபத்திரவிக்காமல் தடுக்க ஏதாகிலும் சங்கம் ஏற்பட்டிருக்கிறதோ?

உ.—ஆம் இருக்கிறது. அதின் பேர்தான் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் என்பது.

கே.—பிராணிகளிடத்தில் கருணைபாராட்டுகிறவர்களெல்லாம் இச்சங்கத்தில் சேரவேண்டுமென்பதற்குஞ் சரியான காரணங்கள் சொல்.

உ.—ஐயா! மேலுலகத்தில் நடக்கிறவிதமாக இவ்வுலகத்திலும் நடக்கும்படி செய்வதேயாம். மேலும், மேலுலகத்தில் இருக்கிற கடவுளானவர் எப்படிப் பிரஜைகள்மீது தயையுடன் கூடியிருக்கிறாரோ, அப்படிப் பிரஜைகளும் இப் பூவுலகத்தில் இருக்கச் செய்யும்படி நியமித்திருப்பதாலும், அப்படிச் செய்வதினால் தானாகவே இரக்ஷித்துக்கொள்ளக்கூடாத சிருஷ்டிவர்க்கங்கள் கஷ்டத்திலிருந்து விலக்கப்படுவதனாலும், ஜீவகாருண்யமுள்ள ஜனங்களெல்லாம் அச்சங்கத்தைச் சேர்வது உசிதமான காரியமே.

## நமக்கு உணவும் உடையும் தரும் ஜந்துக்களுக்கும், நம்முடன் கூடவே பழகுகிற வாயில்லாப் பிராணிகளுக்கும், நாம் செய்யவேண்டிய கடமைகள்.

பசுமாடுகளும்ஆடுகளும் நமக்குவேண்டியபால் தருகின்றன. ஆடுகள் கம்பளம் நெய்வதற்குரிய உரோமங் கொடுக்கின்றன. ஆகையால் அவைகளை ஆதரியாமல் வருத்துவது அநியாயமே. இவ்வண்ணமே நாய், பூனை முதலிய ஜந்துக்களை வருத்துவதும் கூடாது. அவை எப்போதும் நம்மோடுகூடவேயிருந்து களித்து விளையாடிக்கொண்டிருக்க, யார்தான் அவற்றை வருத்த விரும்புவார்கள்? நாய்க்கு வேலையுமில்லை, இருக்க நேரமுமில்லை யென்பதுபோல அதன் வாழ்க்கை கேடுகெட்டது; ஆயினும் அது நல்ல நினைவையே அனுசரிக்கும்; கெட்ட நினைவுகொள்ளாமல் நட்பு பாராட்டும். நாம் என்ன பேச்சுப் பேசினாலும் அதை நாய் அறிந்துகொண்டு அதன்படி நடக்கும். எவ்விதத்திலாவது நமது உபயோகமான காரியத்தைச் செய்வதிலேயே அதற்கு உற்சாகம் அதிகம். நாம் அதைச் சீராட்டினால் அது வாலையாட்டிக்கொண்டு நம்மெதிரில் வந்து கொஞ்சும். நாம் எங்கேபோனாலும் நம்மைப் பின்தொடர்ந்து ஓடிவரும். நமக்கு விரோதியாய் ஒரு மனிதனாவது, மிருகமாவது தீங்கு செய்ய வருவதாகத் தோன்றினால், அவர்களைப் பார்த்துக் குரைத்துத் துரத்திவிடும். ஆய்ந்துபார்க்குமளவில் நாய் மிகவும் நன்றியுள்ள மிருகம் அது தன்னை வளர்ப்பவனை எப்படிப்பட்ட ஆபத்திலும் கைவிடாது.

இவைகளும் இவைபோன்ற இதரமான மிருகங்களும் பழகினாலும் பழகாவிட்டாலும், நாம் இவற்றினிடத்தில் அன்பாயிருப்போமாயின், இவைகளும் நம்மிடத்தில் அன்பாயிருக்கும். இந்த மிருகங்கள் மாத்திரமேயல்ல; நாம் துஷ்டத்தனத்தால் தீங்குசெய்யாமல் நன்மை செய்வோமானால் பறவைகளும், அணில், ஓணான், எலி முதலிய ஜந்துக்களும் நம்மிடத்தில் நன்றியுள்ளவைகளாயிருக்கும். இந்தப் பிராணிகளுக்குப் பொல்லாங்கு செய்பவர் பெரியோர்களைப்பார்க்கிலும் முக்கியமாய்ச் சிறுவர்களே யதிகம்.

ஆனால் அவர்கள் அப்படிச்செய்வது கொடுமை செய்யவேண்டுமென்ற எண்ணத்தினாலல்ல. யுக்தா

யுக்த விவேகம் இல்லாமையாலும் விளையாட்டுத்தனத்தாலுமேயாம். இப்படி நேரும் கொடுமைகளைத் தெரிந்தவர்களான பெரியோர்கள் "பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்" என்னும் ஔவை சொல்லை அவர்களுடைய புத்தியிற் புகட்டித் தம்மாலியன்றவளவு கொடுமை செய்யவொட்டாமல் தடுத்து அப்பிள்ளைகளுக்கு ஜீவசாருண்யம் இயற்கையிலேயே அமையும்படி பயிற்றக் கடவர் ஜீவஹிம்சை செய்யாதிருப்பதைப்பார்க்கிலும் பெருத்த தருமம் வேறொன்று இல்லையென முன்னோர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."—குறள்.

## கிளிகளை வளர்க்கும் வகை.

கிளிகளைப் பலர் அருமையாகப் பிடித்து வளர்க்கிறார்களானாலும், கிளியை வளர்ப்பதற்கு அதிக ஜாக்கிரதை அவசியமில்லையென்று நினைப்பது மிகவும் பிசகானது. கிளிகள் தண்ணீரில்லாமலும், நீராடாமலும், நாம் கொடுக்கிற ஏதோ சொற்பமான உணவைப் புசித்துக்கொண்டு நன்றாக வளருமென்று அநேகர் எண்ணுகிறார்கள். கிளிகளை அப்படி அநாதரவு செய்து வளர்ப்பது மிகவும் கேடுகெட்ட காரியமாயிருப்பதுமன்றி அநியாயமாயுமிருக்கின்றது. இவ்விதமாக வளர்க்கப்பட்ட பக்ஷி நாளடைவில் அசௌக்கியமடைந்து நோய் பிடித்துக் கடைசியில் இறந்துபோகின்றது. அப்படி அது இறந்துபோனபிறகு, 'ஆ! இது எப்படி இறந்துபோயிற்று? நான் நன்றாக வளர்த்தேனே!' என்று அதை அஜாக்கிரதையாக வளர்த்த யஜமானன் ஆச்சரியப்பட்டு அழுகிறான். அது நூறாண்டளவு நன்றாய்ப் பிழைத்திருந்து தனக்கு இன்பம் விளைக்குமென்று அவன் ஆசை கொண்டிருந்தான்.

கிளிகள் அப்படியே நூறுவருஷசாலம் உயிரோடிருக்குமென்பது உண்மையே. ஆயினும் அவைகளை எவ்விதமாகப் போஷித்து வளர்க்கவேண்டுமோ, அவ்விதமாக வளர்த்தால்மட்டும் அவை அப்படி ஜீவித்திருக்குமேயொழிய, மற்றப்படி ஜீவித்திரா. கிளிகளை வைத்து வளர்க்கவேண்டிய வகையைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகமிருக்கின்றனவாயினும், அவற்றுள் முக்கியமான இரண்டொரு விஷயங்களைமாத்திரமிங்கே சுருக்கமாக எடுத்துச் சொல்வோம்.

கிளிகளுக்குப் பேசக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று அதற்காகப் பலர் அவைகளை மிகவும் இருட்டான அறைகளில் அடைத்து, வேண்டிய உணவும் அளிக்காமல் பட்டினியாய்க் கொல்லுகிறார்கள். இது பெரிய குற்றமும் அவசியமில்லாத காரியமுமாம். சற்று யோசித்துப் பார்த்தால், நம்மைப்போலவே மற்ற ஜீவன்களையும் நல்ல சுகமானவிடத்தில் வைத்துச் செம்மையாக வளர்க்கவேண்டுமென்பது யாவருக்கும் நன்றாக விளங்குமன்றோ? முக்கியமாகக் கிளிகளுக்கு அவை விரும்பத்தக்க நல்ல உணவுகளை யளிக்கவேண்டும். பலவகைத் தானியங்களும் பழங்களும் அவற்றிற்குச் சிறந்த உணவாம். குடிப்பதற்கும் அழுக்கில்லாத நல்ல தண்ணீர் வேண்டும்; அவை வசிக்கும் கூடுகளும் அவை ஸஞ்சரிப்பதற்குப் போதுமான விசாலமுடையனவாய் மிகப் பெரியவையாயிருக்கவேண்டும். கிளி கொந்துவதற்கு மெதுவான சில கட்டைகளுமிருக்கவேண்டும். கூட்டின் அடித்தட்டில் கல்லோடுகூடிய நொய்களும் இறைத்திருக்கவேண்டும். ஏனெனில், கிளிகளுக்கு உணவு ஜீரணமாகச் சிறிய கற்கள் அவசியமானவை. இவ்வளவு சௌக்கியங்களையும் கிளிகளுக்கு உண்டாக்கிவைத்து, பிறகு அவைகளை ஒரு தனியான அறையில் விட்டு, அதற்குப் பேசக் கற்பித்துக்கொடுக்கும் உபாத்தியாயன் அடுத்த மற்றொரு அறையில் மறைந்துகொண்டிருக்கவேண்டும். அந்த உபாத்தியாயன் சொல்லுகிற சொல்மாத்திரம் கிளிக்குக் கேட்கவேண்டுமேயொழிய, ஆள் கண்ணுக்குத் தென்படக்கூடாது. இவ்விதமாக மறைந்துகொண்டு அவன் தான் கற்றுக்கொடுக்க எண்ணிய வார்த்தையைப் பொறுமையுடனே பலதரம் சொல்லவேண்டும். பெட்டைக் கிளிகளுக்குப் பேசுந் திறமை கிடையாது. பேசும் பக்ஷிகளில் பெண்பக்ஷிகள் ஒருபோதும் பேசுகின்றவையல்லவென்பது முக்கியமாக ஞாபகமிருக்கவேண்டும். அவைகளுக்குப் பேசக் கற்பித்துக்கொடுக்க ஒருபோதும் முயலவேண்டாம். எல்லா விதிகளுக்கும் விலக்கு இருப்பதுபோல இதற்கும் விலக்குகளுண்டு; ஆயினும் அவை மிகவும் அருமையாயிருக்கின்றன. பற்பலஜாதிக் கிளிகளிலும் ஆண் கிளிகளெல்லாம் பேசுகின்றவையேயாம்.

கிளிகள் தாம் இயற்கையாக வசிக்கும் காடுமுதலான விடங்களில் தமக்கு இஷ்டமானபடி வேண்டியவளவு தடாகம் முதலியவைகளில் காலை மாலை இரண்டுவேளையும் தண்ணீரைப் பருகித் திருப்தியடைந்து வாழ்கின்றன. கூட்டில் அடைக்கப்பட்ட கிளிகளோ, சிறிதளவு தண்ணீர் குடித்து உயிர் வாழ்கின்றனவாகக் காணப்பட்டாலும், அதனால் அவை பிராணன்போகாமல் மாத்திரம் பிழைத்திருக்கின்றனவேயொழிய, செழித்து வளரமாட்டா. இப்படிக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் போகும்போது கிளிகள் தமக்குக் கொடுக்கும் உணவை அளவுக்குமிஞ்சி யதிகமாக உண்ணும்படியாய் நேரிடுகிறது. அதனால் அஜீரணம் முதலான நோய் கண்டு கிளி வருந்தும்படியாகிறது.

கிளிகள் தாமே குளிக்க விரும்புவதில்லையென்றெண்ணி நாம் கூட்டில் விட்டுவளர்க்கும் கிளிகளைக் குளிப்பாட்டாமல் விட்டுவிட்டால், அவற்றின் உடல் வறட்சிகொண்டு உடம்பில் எரிச்சலு

முண்டாகும்; அதனால் அப்பறவை சிறகு உதிர்ப்பது மிகக் கடினமாகின்றது; சிலவேளை முற்றும் அசாத்தியமானாலும் ஆகிவிடும்.

அப்படியில்லாமல், ஓர் அறையிலே அகன்ற ஒரு பாத்திரத்தில் நிரம்பத் தண்ணீர்வைத்து, அதில் தன்னிஷ்டப்படி திரியக் கிளியைக் கூட்டைத் திறந்து விட்டுவிட்டால், அது அதிக சந்தோஷமாய்ச் சிறகுகளைக் கோதிக்கொண்டு தண்ணீர்ப் பாத்திரத்தி லிறங்கி நீராடவுங் கண்டிருக்கிறார்கள்; ஆனால் அவ்விடம் அதிகமாகக் குளிர்ச்சியாயிராமல் கொஞ்சம் சூடாயிருக்கவேண்டும்.

சாதாரணமாகக் கிளி தானே தண்ணீர்ப்பாத்திரத்தி லிறங்கிக் குளிக்கப் பிரியப்படாது; அதனால் அதை அப்படி வருத்தி முழுகப்பண்ணுவதைப் பார்க்கிலும், பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் தெளிக்கும் சல்லடைக்கண் தண்ணீர்ப்பாத்திரத்தினால் கிளியின்மேல் தண்ணீர் தெளித்துக் குளிப்பாட்டுவது மிக நல்லது; அந்த நீர் குளிர்ந்த தண்ணீராயிராமல் இளஞ்சூடான வெந்நீராயிருந்தால் உத்தமம். இப்படிக் குளிப்பாட்டினால், பிறகு அதன் இறகு அழுக்குகள்போய்ப் பளபளப்பாயிருக்கும். சீதகாலமாயிருந்தால் இப்படி மூழ்கப்பண்ணின பிறகு அக்கிளியைக் கூட்டோடே நெருப்பு எரிகிற இடத்திற்குச் சமீபத்தில் அந்த அனல் அதன்மேல் படும்படி கிளியின் சிறகுகள் உலருமளவும் வைத்துக்கொண்டிருந்தால், அக்கிளிக்கு மிகவும் சுகமாயிருக்கும். இவ்விதமாக வாரத்திற்கு இரண்டு முறைக்குக் குறையாமல் குளிப்பாட்டவேண்டும். குளிர்காலத்தில் அதன்மேல் அதிகமாகக் குளிர் தாக்காதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாக ஸ்நானம் செய்விப்பதனால், கிளிக்குச் சிறகுகளைக் கடிக்கிற கெட்ட வழக்கம் நீங்கிப்போகும்; சிலவேளை குளிர்ச்சியான உணவுகளைக் கொடுப்பதனாலும், உடம்பில் சொரி முதலியவை உண்டாகாமல் உதிரம் சுத்தப்படும்.

முக்கியமாகப் பக்ஷி வசிக்கும் கூடு அதற்கு ஓடியுலாவப் போதுமானவளவு பெரிதாக இருக்கவேண்டும். ஒரே இடத்தில் அடைபட்டிராமல் தேகப்பயிற்சி செய்வது பக்ஷிகளுக்கும் அவசியமாகையால், எப்பொழுதாவது சற்றுநேரம் அதனைக் கூட்டைத் திறந்து வெளியேவிட்டு வீட்டுக்கூடத்தில் பறக்கும்படி செய்யவேண்டும். கிளிக்கூடு வட்டமாயிருப்பதினும் சதுரமாயிருப்பது நலமென்கிறார்கள். ஏனென்றால், மூலைகளில் போய்ப் பதுங்குவதும், கம்பிகளில் தொத்தியேறுவதும் கிளிகளுக்கு வழக்கமாகையால், அப்பொழுது அதன் சிறகுகளுக்கு அதிகமாய் அபாயமுண்டாகாமலிருக்கும். கூட்டின் நடுவே அமைத்திருக்கும் குறுக்குக் கம்பியில் ஏறி யுட்காருகிற வழக்கம் பறவைகளுக்கு அதிகமாகையால், அந்தக் கம்பி மரமாகவேயிருக்கவேண்டும்; இரும்பாயாவது தகரமாயாவது இருக்கலாகாது. தகரமும் இரும்பும் கிளிக்குச் சீதளம் உண்டாக்கும். குளிர்காலத்தில் கிளிகளைச் சற்றுநேரம் வெயிலில் கட்டிவைப்பது ஆரோக்கியமானது; இரவில் குளிர் அதிகமாயிருந்தால், கிளிக்கூட்டின்மேல் ஒரு கம்பளத்தை மூடிவைக்கவேண்டும்; ஏனென்றால், நம்மைப்பார்க்கிலும் கிளிக்கு உஷ்ணம் அதிகமாகவேண்டும். ஆகையால் இரவில் நமக்குக் காற்று வேண்டுமென்று நாம் சாளரங்களைத் திறந்துவிடுவோமானால், அந்தக் குளிர் பொறுக்காமல் கிளி வருத்தப்படும். அப்படிப்பட்ட காலங்களில் அதன் கூட்டின்மேல் கம்பளிபோட்டு மூடிவைப்பது நல்லது.

கிளிகளுக்கு உணவு அளிக்கும் விஷயத்திலும் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். கிளிகள் சாதாரணமாய்த் தானிய பக்ஷிணிகள். பல ஜாதிப் பறவைகளுக்குத் தானிய மணிகளே மிகுதியாக வேண்டும். சோளம் தினை முதலான தானியங்கள் அவைகளுக்கு மிகவும் ஆரோச்கியமான உணவுகளாம். பழவகைகளையும் அவை விசேஷமாக விரும்புகின்றன. ஆயினும் அவைகளுக்கு நாள்தோறும் ஒரேமாதிரியான பழங்களைக் கொடுத்துவராமல் ஒருநாள் கிச்சிலிப்பழம், ஒருநாள் திராக்ஷைப்பழம், என்று இப்படி தினம் ஒன்றாக மாற்றி மாற்றிக் கொடுப்பது சிறந்தது. தானியங்களை உணவாக அளிக்கும்பொழுது அவற்றைத் தண்ணீரில் ஊறவைத்தாயினும், சற்றே சமைத்தாயினும் போட்டால் அவற்றிற்கு எளிதில் ஜீரணமாகும். மிளகாய்ப்பழத்தில் கிளிக்குப் பிரியம் அதிகம்.

## பழக்கமான பக்ஷிகள்.

பக்ஷிகள் பழகிப்போனால், பிறகு எதற்கும் பயப்படாமல் மனிதர்போலவே எவ்விடத்திலும் தாராளமாகக் கூடுகட்டிக்கொண்டு வாழ்கின்றன. இதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. 1. வடதேசத்தில் சில விடங்களிலே சில பக்ஷிகள் இருப்புப்பாதை யந்திரவண்டிகள் விட்டிருக்குமிடத்தில் ஒரு கம்பத்தின்மேல் கூடுகட்டிக் குஞ்சுபொரித்துச் சுகமாக வாழ்ந்திருந்தன; இருப்புப்பாதை யந்திரவண்டிகளிருக்குமிடத்தைப்போலச் சந்தடியுள்ள விடம் வேறுண்டோ? 2. சில பக்ஷிகள் இருப்புப்பாதைவண்டியோடும் தண்டவாளத்தின் கீழ்ப்பலகையின்மேல் கூடுகட்டி வாசஞ்செய்தது கண்டு பலர் வியந்திருக்கிறார்கள். 3. சில பக்ஷிகள் இருப்புப்பாதைத் தண்டவாளத்தின் கீழ் ஒரு பாலத்தில் கொஞ்சம் நீண்டிருந்த ஒரு கல்லின்மேல் கூடுகட்டியதை அநேகர் பார்த்து அதிசயப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். 4. நமது வீட்டுத் தாழ்வாரங்களிலுள்ள சந்துகளில் சிறு குருவிகள் சாதாரணமாக வந்து கூடுகட்டுவது நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயமே யன்றோ?

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1902.